
## திராவிடத்தால் வாழ்கிறோம்

986

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

131

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கோபி ஜி.பி.வெங்கிடு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# கோபி ஜி.பி.வெங்கிடு; பெட்டிக்கடைக்காரர்; பெருந்தொண்டர்!

1996-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல். கோபிசெட்டிபாளையத்தில் பலம் பொருந்திய வேட்பாளராக நின்றவர், அ.தி.மு.க. அமைச்சராக இருந்த கே.ஏ.செங்கோட்டையன். அவரை எதிர்த்து கழகத்தின் சார்பில் கலைஞர் நிறுத்திய வேட்பாளர் வெங்கிடு. கோபி வெங்கிடு என்றால், கழகத்தினர் அறிவர். பெட்டிக்கடைக்காரர் என்பது அப்பகுதி மக்கள் அறிந்த எளிய அடையாளம். தேர்தல் பிரச்சாரத்தில் வட்டிக்கடையா? பெட்டிக்கடையா? என்கிற கேள்வி அனல் பறந்தது. 15 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் பெட்டிக்கடைக்காரர் வென்றார். பெரும் போட்டியையும், பண பலத்தையும் எதிர்த்து வெற்றிபெற்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்பு.

பள்ளிப்பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட இலக்கிய அணித் தலைவர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததுடன், தலைமைக் கழகப் பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளைப் பரப்பியவர்.


### தமிழ்ப் புலமையும் தார் சட்டியும்...

உடுமலை நாராயணன், பி.ஏ.சாமிநாதன் உள்ளிட்ட அன்றைய கோவை மாவட்ட முன்னோடிகளுடன் இணைந்து செயல்பட்டவர். கோபிச்செட்டிபாளையம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர். 1958-ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட 3-வது மாநாட்டில் இவரது பணிகளை அறிந்து அண்ணா பாராட்டி இருக்கிறார்.

தமிழில் ஆழமான புலமை கொண்டவர். கழக வளர்ச்சிக்காக அப்பகுதியில் ஒரு செயல்வீரராகப் பாடுபட்டவர். தலைமைக் கழகம் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் வெங்கிடு அவர்கள் முன்னிலை வகிப்பார். 1952-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, தார்சட்டியைத் தூக்கிக் கொண்டு 'இந்தி ஒழிக' என சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்தவர். 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைதான வர்களில் ஒருவர். மிசா நெருக்கடி காலத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

### பெட்டிக்கடை அரசியல்

தொடக்க காலத்தில் முடிதிருத்தும் நிலை யங்கள், படிப்பகங்கள், பெட்டிக்கடைகள்தான் கழக அரசியலை மக்களிடம் கொண்டு சென்ற களங்களாக இருந்ததை அறிவோம். வெங்கிடு அவர்கள் பெட்டிக்கடை நடத்தினார். கோபி கடைவீதியில் பெரியார் சிலைக்கு எதிரில்தான் பெட்டிக்கடையுடன் இருந்தது அவரது தேநீர் கடை. அந்த இடம் எல்லா நேரமும் அரசியல் பேசுவதற்கான களமாக இருந்தது. 1977 ஆம் ஆண்டு கோபி தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு தோல்வி யைத் தழுவினார். சட்டமன்ற பணியை அவர் எதிர்பார்த்தவரல்ல; ஆனால், 20 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இந்த பெருந்தொண்டருக்கு 1996-ஆம் ஆண்டு சட்டமன்ற வேட்பாளராக மீண்டும் வாய்ப்பினை வழங்கினார் கலைஞர். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.




1991-ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சி காலத்தில், அமைச்சர்களின் ஊழல் குறித்த செய்தி விவரங்களை நக்கீரன் இதழ் வெளியிட்டு வந்தது. அதில், ஒரு இதழில் கோபிச்செட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினரும், அ.தி.மு.க அமைச்சராகவும் இருந்த செங்கோட்டையன் குறித்த செய்தி வெளியானது. அதையடுத்து, அவரது ஆதரவாளர்கள் கோபி பகுதியில் நக்கீரன் இதழை எரித்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன், எந்தக் கடையிலும் விற்பனை செய்யக்கூடாது என மிரட்டவும் செய்தனர். அந்த எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் , தனது கடையில் நக்கீரன் இதழை பொதுமக்கள் பார்க்கும்படி மாட்டி வைத்து விற்பனை செய்தார். அவரது கடை அடித்து நொறுக்கப்பட்டது. ஆனாலும் வெங்கிடு அசராமல், கடையை சரிசெய்து அடுத்த நாளே, அதே துணிவுடன் அதே பத்திரிகையை விற்பனை செய்தார்.

### செல்வாக்கினைத் தகர்த்த கழகக்காரர்

தொடர்ந்து நான்கு முறை கோபி தொகுதி யில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர், அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்தவர், தொகுதியில் சாதி செல்வாக்குக் கொண்டவர் என அறியப்பட்டவருக்கு எதிராக, அவரால் பாதிக்கப்பட்ட கழகத்தின் எளிய தொண்டரையே 1996-ஆம் ஆண்டு வேட்பாளராக நிறுத்தினார் கலைஞர். அவரது தேர்தல் கணிப்பு துல்லியமாக இருந்தது. வெங்கிடு மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று வந்தார். அவர் கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் தொகுதி மக்களின் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி, அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தவர்.

> “கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவராக, பொதுமக்களின் குறை தீர்க்கும் நண்பனாக, தொகுதி மக்களின் நல்லதொரு குடும்ப உறுப்பினராகத் திகழ்ந்தவர்,”

மேவாணி- அத்தானி பாலம், அலங்கியம் குருமந்தூர் பாலம், கள்ளிப்பட்டி பா.நஞ்ச கவுண்டன்பாளையம் பாலம் ஆகியவையும், நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவை இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கொண்டுவந்தவை. தவிர, இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கோபி மக்கள், பெட்டிக்கடையிலே சட்டமன்ற உறுப்பினரைச் சந்திக்கும் அளவு எளிமையாக இருந்தவர். பதவிக்குப் பின்னரும் அங்குதான் இருந்தார்.

2007-ஆம் ஆண்டில் கோபி பெரியார் திடலில் அமைக்கப்பட்ட ஆளுயர வெண்கல 'பெரியார் சிலை' அமைப்புக் குழுவின் செயலாளராக இருந்து வழிகாட்டியவர். எல்லா காலத்திலும் திராவிடக் கொள்கையில் உறுதி, தி.மு.கழகத்தில் பணி, எளிமையான அடையாளம், பெட்டிக் கடைத் தொழில் என தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். 2020-ஆம் ஆண்டு, கொரோனா பெருந்தொற்று காலத்தில், செப்டம்பர் 23 அன்று தனது 86-வது வயதில், வயதுமூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் செய்தியில்,

'கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவராக, பொதுமக்களின் குறை தீர்க்கும் நண்பனாக, தொகுதி மக்களின் நல்லதொரு குடும்ப உறுப்பினராகத் திகழ்ந்தவர், ஜி.பி.வெங்கிடு அவர்கள்' என புகழாரம் செய்தார். ஒவ்வோர் ஆண்டும் ஈரோடு மாவட்டக் கழகத்தினர் அவரது நினைவு நாளில் திரண்டு, பெரியார் பெருந்தொண்டர், கழகத்தின் களவீரர் வெங்கிடுவின் நினைவு களைப் போற்றுகின்றனர். ஆண்டுகள் பல கடந்தாலும் அந்தக் கழக உணர்வு, உறவு தொடரும்.

...துடிக்கும்

## பெரியாரைப் பேசும் வாய்ப்பு -பேச்சுப் போட்டி!




பெரியாரிய உரையாடல்கள், கருத்தரங்குகளின் தேவை, காலத்தின் அவசியமாக உள்ளது. கருத்தியல் எதிராளிகள் கழக அரசுக்கு எதிராக சூழ்ச்சிகளைச் செய்து வரும் நேரத்தில், அதை எதிர்கொள்ள பெரியாரே பேராயுத மாக உள்ளார். பல வடிவங்களில், பல வகையில் கிராமங்கள்தோறும் மீண்டும் பெரியார் கொண்டுசெல்லப்பட வேண்டும். அந்த வகையில், தந்தை பெரியாரின் 147-வது பிறந்தநாளை யொட்டி, இராமநாதபுரம் மாவட்ட பகுத்தறிவாளர் கழகம் பேச்சுப் போட்டி நடத்த உள்ளது. 18.10.2025 அன்று குமரய்யா கோவில் பேருந்து நிலையம், ஜே.ஜே.மருத்துவமனை அருகில், காலை 9.30 மணிக்கு இந்த பேச்சுப் போட்டி நடைபெற உள்ளது.

- * பெரியாருக்கு முன்னும் - பெரியாருக்குப் பின்னும்
- * பெரியார் ஒரு கேள்விக்குறி - பெரியார் ஒரு ஆச்சரியக்குறி
- * எப்போதும் தேவை பெரியாரே
- * இடஒதுக்கீடு - சாதி ஒழிப்பு - பெண்ணுரிமை
- * நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- * பெரியார் இல்லாவிடில், இன்றும்... நாளையும்... நம் நிலை

ஆகிய தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பில், 5 நிமிடங்கள் பேச வேண்டும். பேச்சுப் போட்டியில் பங்கேற்க விரும்புவோர், அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். போட்டியில் வெற்றிபெறுவோருக்கு ரொக்கப் பரிசுகளையும் இராமநாதபுரம் மாவட்ட பகுத்தறிவாளர் கழகம் அறிவித்துள்ளது.

தொடர்பு கொள்வதற்கு 99944-44505, 98436-85126 ஆகிய எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. பேச்சுப் போட்டியில் வெற்றி பெறுவதைவிடவும், பெரியாரைப் பேசுதல் பெரும் வாய்ப்பு. களம் அழைக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்





'முரசொலி' ஜெயக்குமரன்

### பயிற்சிப் பாசறை நினைவுப் பரிசு!

2012-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 19-ஆம் தேதி, தென் சென்னை மாவட்ட இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நான், தலைவர் அவர்களிடமிருந்து நினைவுப் பரிசு பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியான தருணம்.

**- 'முரசொலி' ஜெயக்குமரன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு — மேயர் சிட்டிபாபு கைது!

1965 ஜனவரி 25 அன்று, சென்னை மாநகராட்சியின் மேயர் சி.சிட்டிபாபு கைதுசெய்யப்பட்டார். கோபிசெட்டி பாளையம் நிகழ்ச்சிக்குச் சென்று வந்தவரை, இரவு 12 மணிக்கு, சத்தியமங்கலத்தில் போலீசார் கைதுசெய்தனர். 15 நாள் காவலில் வைக்கப்பட்டவர், கல்கத்தாவில் நடைபெற இருந்த அகில இந்திய மேயர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131